**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 60** **நாள்: 27.01.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வாழிகாட்டுதலின்படி, "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் மூலம் ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 284 மாணவியருக்கு மடிக்கணினிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (27.01.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 284 மாணவியருக்கு, பிரகாசம் சாலையில் உள்ள பாரதி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

**விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.01.2026 அன்று சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் மூலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறையில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்தும் வகையில் கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு ரூ.2,172 கோடி மதிப்பீட்டில் 10 இலட்சம் மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அரசின் இத்தகைய முன்முயற்சிகள் மாணவர்களை உலகளாவிய போட்டித் திறன் கொண்ட மனித வளமாக அவர்களை உருவாக்கும் ஒரு வலுவான அடித்தளமாக திகழ்கிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று (27.01.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 284 மாணவியருக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திரு.வெ.பரிமளம், கல்லூரியின் செயலாளர் திரு.கிஷோர்குமார், முதல்வர் முனைவர் வனிதா மற்றும் அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**